24.01.2017

# மேலும் 34 நெல் கொள்முதல் நிலையங்கள் இன்று திறப்பு



கடலூர் மாவட்டத்தில் கூடுதலாக 34 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திங்கள்கிழமை திறக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் த.பொ.ராஜேஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: விவசாயிகளின் நலன் கருதி கடலூர் மாவட்டத்தில் தமிழக அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. இங்கு குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத் தொகை உள்ளடக்கி, சன்னரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,580, பொது ரகம் குவிண்டாலுக்கு ரூ.1,520 என தமிழக அரசு அறிவித்துள்ளது.

கடலூர் மாவட்டத்தில் அறுவடையாகும் நெல்லினை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்திட ஏதுவாக இதுவரை கடலூர், குறிஞ்சிப்பாடி, விருத்தாசலம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் தலா 2 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

இந்த நிலையில், விருத்தாசலம் வட்டத்தில் 13, காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் 8, திட்டக்குடி வட்டத்தில் 5, சிதம்பரம் வட்டத்தில் 3, புவனகிரி வட்டத்தில் 4, வேப்பூர் வட்டத்தில் ஒரு இடம் என மொத்தம் 34 இடங்களில் திங்கள்கிழமை (ஜன.23) முதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. எனவே, விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் நெல் பயிர்களை, தங்களது கிராமங்களுக்கு அருகில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயனடைய வேண்டும் என ஆட்சியர் அதில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ரூ.803 கோடியில் மானாவாரி வேளாண்மை இயக்கம்



ரூ.803 கோடி செலவில் நிலைக்கத்தக்க மானாவாரி வேளாண்மை இயக்கத்தை தமிழக அரசு விரைவில் தொடங்கும் என்று ஆளுநர் அறிவித்துள்ளார். இதுகுறித்து ஆளுநர் உரையில் கூறியிருப்பது:-மானாவாரி விவசாயப் பகுதிகளின் மேம்பாட்டுக்காகவும், அந்தப் பகுதிகளில் பயிரிடப்படும் சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் ஆகியவற்றின் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கும் நோக்குடனும் 2016-17-ஆம் ஆண்டில் தொடங்கி, அடுத்த 4 ஆண்டுகளில் செயல்படுத்தும் வகையில் ரூ.803 கோடியில் நிலைக்கத்தக்க மானாவாரி வேளாண்மை இயக்கத்தை தமிழக அரசு விரைவில் தொடங்க உள்ளது. தானிய உற்பத்தியில் சாதனை: மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி தொடர்ச்சியாக 3-ஆவது ஆண்டாக 100 லட்சம் மெட்ரிக் டன் என்ற அளவை விஞ்சியுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

**என்எல்சி உபரி நீரை விவசாய பயன்பாட்டுக்கு அளிக்கக் கோரிக்கை**

என்எல்சி இந்தியா நிறுவன உபரி நீரை விவசாயப் பயன்பாட்டுக்காக பின்னலூருக்கு திருப்பிவிட வேண்டும் என அம்பேத்கர் விவசாயிகள், தொழிலாளர் சங்கத்தினர் மாவட்ட ஆட்சியரகத்தில் திங்கள்கிழமை மனு அளித்தனர். இதுகுறித்து சங்கத் தலைவர் பின்னலூர் வீரகணேசன் ஆட்சியரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் கூட்டத்தில் அளித்த மனு:

என்எல்சி நிறுவனத்தின் உபரி நீர் புவனகிரி வட்டம், பின்னலூர் கிராமம் வழியாக பரவனாறு மற்றும் வாலாஜா

ஏரிக்கு சென்று கலந்து வருகிறது.
 இதில் வாலாஜா நீர்பிடிப்புப் பகுதி மற்றும் பரவனாறு சூடாமணி ஏரி ஆகியவற்றுக்கு இடையே சுமார் 300 ஏக்கரில் விவசாய நிலம் உள்ளது. இந்த நிலம் முழுவதும் தலித் மக்களின் வசம் உள்ளன. இருபுறமும் நீர்பிடிப்புப் பகுதி இருந்தும், 300 ஏக்கர் நிலமும் போதிய பாசன வசதி இல்லாமல் வறண்டு காணப்படுகின்றன.

 எனவே, வாலாஜா ஏரியின் கீழ்ப் பகுதியில் கரையோரமாக சுமார் ஒரு கி.மீ. நீளத்துக்கு வாய்க்காலை தூர்வார வேண்டும். மேலும் வாலாஜா ஏரிக்கு வரும் வடவாறு, பரவனாறு, சூடாமணி ஏரி ஆகியவற்றின் முகப்பில் தடுப்பணைப் பலகை அமைக்க வேண்டும்.
 இந்தப் பணிகளை என்எல்சி பொது செலவின நிதியிலிருந்து மேற்கொண்டு, தலித்துகள் விவசாயம் செய்திட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்த மனுவில் வலியுறுத்தினார்.